




## டிஸ்ட் இந்தியாவில் பெண் உறுப்பினர்களின் பங்கு

நாம் மரங்கள் நடுவதின் மூலம் சுத்தமான காற்றை சுவாசிக்கலாம். பெண்கள் வேலை என்னவென்றால் பிளாஸ்டிக் பையை உயிர்சத்துள்ள மண் கலந்த பொருளையும் விதைகளையும் சேகரித்து நிரப்புவதாகும். ஆண்கள் மரங்களுக்கோ / கன்றுகளுக்கோ நீர் விட தவறினால் பெண்கள் நீர்விட வேண்டியிருக்கும். பெண்கள் விதைக்கன்றுகள் உள்ள அந்த நாற்றங்கால்களை பராமரிப்பதில் செயலாக்க பங்கு எடுக்க வேண்டும். ஆகையால் நாம் பெண் உறுப்பினர்களளை மரங்கள் நடும் செயலிலும், நாற்றங்கால்களை பராமரிப்பதிலும் நாம் நன்கு கற்றுக் கொடுக்க வேண்டும். பெண்கள் தாங்கள் குழந்தைகளை வளர்ப்பதைப் போலவே மரங்களை வளர்ப்பதையும் பேணுவார்கள். அதனால் தங்களது பணியுடன் மகிழ்வாகவும் மிகவும் திருப்தியுடனும் இருப்பார்கள். நாம் நமது குழந்தைகளுக்குக்கூட மரம் நடும் செயல்பாட்டை கற்றுக் கொடுக்க வேண்டும். ஆகையினால் டிஸ்ட் இந்தியாவில் பெண்களின் பங்கு மிகவும் அவசியமானதாகும்.

**TIST Tree Planting India Private Limited**
Flat A, Plot No.69, 26th Street, Sankar Nagar, Pammal, Chennai 600075
Phone: 09840299822 / Email: josephrexontist@gmail.com / skype: a.joseph.rexon
Visit us at www.tist.org




பூமி தினம் 22.04.2017

உலக வெப்பமயமாதல், இரசாயண உரங்களால் விளை நிலங்கள் விஷமாதல், மண் மாசுபாடு, பிளாஷ்டிக் கழிவுகள் இதுபோன்ற பல்வேறு சுற்றுச்சூழல் பிரச்சனைகளால் நமது பூமி வாழ தகுதியற்றதாக மாறி வருகின்றது.

உலகெங்கிலும் பரவி வாழும் எல்லா உயிரிணங்களின் எல்லா தேவைகளையும் நிறைவேற்றி நம் ஒவ்வொருவரின் முதல் தாயாக இந்த பூமி விளங்குகின்றது. இந்த பூமியை காக்கவேண்டியது நமது கடமை என்பதை நாம் ஒவ்வொருவரும் உணர்ந்து விழிப்படைந்து செயலாற்றவேண்டும்.

மேலும் இந்தநாளில் இந்த மண்ணுக்கும் மக்களுக்கும் தீங்குவிளைவிக்காத வாழ்வை வாழ்வோம் என்று உறுதி ஏற்போம்.





## வேளாண் காடுகள் வளர்ப்பில் நீர்மேலாண்மை

மரப்பயிர் செய்யும் பொழுது முக்கியமானது குழி எடுத்தல் ஆகும்.

- 45 செ.மீ. × 45 செ.மீ. குழி எடுத்து ஒரு வார காலம் குழியை காற்றோடவிட்டு பின்பு செடி நடுதல் வேண்டும்.

- 15அடி இடைவெளியில் மரங்களை நடவு செய்தல், அதன் இடைவெளிகளில் ஊடுபயிர் செய்வதன் மூலம் மேலும் இடைப்பட்ட காலங்களில் வருமானம் ஈட்ட முடியும், மரமும் நல்லமுறையில் பருமனாக வளரும்.

- மரங்களை கிழக்கு மேற்காக தான் நடுவு செய்யவேண்டும். ஏனெனில் பக்கத்தில் உள்ள நிலங்களில் எப்பொழுதும் நிழல் அடித்து பயிர்களுக்கு பாதிப்பு ஏற்படுத்தும் மரம் அதன் சுற்றளவை விட 2 1/2 மடங்கு அளவிற்கு அதன் வேரை பரப்பி பூமி மேல்பரப்பில் ஓடும் நீரை உறிஞ்சி பூமிக்கு அனுப்புகிறது.

- கோடை காலங்களில் மரங்களை நீர் பற்றாக்குறைகளிலிருந்து பாதுகாக்க 1 1/2 லிட்டர் பிளாஷ்டிக்பாட்டிலை கொண்டு அதில் ஒரு சிறு துளையிட்டு இருக்கமாக ஒரு நாடாவை செலுத்தி மரத்தின் அடியில் பாட்டிலை வைப்பதன் மூலம் ஒரு வாரம் வரை பாட்டிலில் நீர் வேர் பகுதிக்கு மட்டும் செல்வதன் மூலம் மரங்களை குறைந்த நீர்கொண்டு காப்பாற்ற முடியும். விற்பனை வாய்ப்புள்ள மரங்களை மட்டுமே நடுவதன் மூலம் பிற்காலங்களில் பிரச்சனைகளை தவிர்க்கலாம்.





நம் எதிர்கால தலைமுறையினர்க்கு பணம், புகழ் போன்றவற்றை சேர்த்து வைத்தால் போதாது, முக்கியமாக சுகாதாரமான சூழல் கண்டிப்பாக அவர்களுக்கு தேவை, வாருங்கள் எல்லோரும் இணைந்து எதிர்கால தலைமுறையினர்க்கு மரங்கள் நடவு செய்து நல்ல சூழலை உருவாக்குவோம்.

## வறட்சி மேலாண்மை (மெட்டிலோ பாக்ட்ரியா)

கோடைகாலங்களில் நீர் பற்றாக்குறையாலும், கோடையின் தாக்கத்தாலும் ஏற்படும் வறட்சியினை சமாளிக்க TNAU-வினால் கண்டுபிடித்து பரிசோதனைகளுக்குப் பிறகு வெளியிட்டியிருக்கும் மெட்டிலோ பாக்ட்ரியா என்ற நுண்ணுயிரியை 300 ml எடுத்து 1 லிட்டர் தண்ணீருடன் கலந்து காலை 6.00 மணிக்குள் பயிர்களின் மீது பயிர் தெளிப்பான் மூலம் பயிர்களின் மூலம் நீராவிபோக்கு ஏற்படுவதை இதன் மூலம் கட்டுப்படுத்தலாம். இதன் மூலம் பயிர்களின் ஈரப்பதமும், நிலத்தின் ஈரப்பதமும் 20 முதல் 25 நாட்கள் வரை வறட்சியை தாக்குபிடித்து பயிர் வளரும். இதனால் பயிருக்கு எவ்வித வளர்ச்சிதை மாற்றமும் ஏற்படாது. இது முற்றிலும் வறட்சிக்காக பயன்படுத்த கண்டுபிடிக்கப்பட்டதாகும்.

இதன் விலை 300 ml ரூ. 360/- ஆகும். இதனை பயிர்களின் மீதும் தெளிக்கலாம். நிலம் ஈரப்பதத்துடன் இருக்கும்போது வேரின் மீதும் அடிக்கலாம்.



## பசுமை சிறுகுழு - வசூர் கிராமம்

திருவண்ணாமலை மாவட்டம், துரிஞ்சாபுரம் மையத்தில் வசூர் கிராமத்தில் பசுமை சிறுகுழுவானது இயற்கை முறையில் TIST ன் மூலம் மரக்கன்றுகளை சிறப்பாக வளர்த்து வருகின்றனர்.

இச்சிறுகுழு உறுப்பினர்கள் கூறுகையில், எங்கள் சிறுகுழுவில் தேக்கு மரக்கன்றுகள் 2500 உள்ளது. நாங்கள் இயற்கை முறையின் மூலம் விவசாயம் செய்து வருகின்றோம். அதுமட்டுமல்லாது மரக்கன்றுகளுக்கு மண் புழு உரம் இடுதல் மற்றும் மரத்தின் வேர்பகுதியில் மூடாக்குபோடுதல் அதுமட்டுமல்லாது இந்த கோடை காலத்தில் மரக்கன்றுகளுக்கு இடையே ஊடு பயிராக புல் வகைகள் கோ-4, 5 போன்ற இரங்களை ஊடு பயிர்களாக வளர்த்து மண்ணின் ஈரப்பதத்தை காத்துக்கொள்கின்றோம்.

தங்களின் பசுமாடுகளுக்கு தேவையான புல்கள் போட்டு வளர்த்து வருகின்றோம். TIST - ன் அனைத்து கணுக்கூட்டங்கள், பயிற்சி கூட்டங்கள் தவறாமல் கலந்துகொள்கிறோம். TIST-ன் ஊக்கத்தொகையை பெற்று வருகின்றோம்.



## ஜெயராமன் சிறுகுழு – திருவேங்கடநல்லூர் கிராமம்

திருவண்ணாமலை மாவட்டம், ஆரணி மையத்தில் திருவேங்கடநல்லூர் கிராமத்தில் உள்ள ஜெயராமன் சிறுகுழு TIST திட்டத்தில் இணைந்து செயல்பட்டு வருகின்றனர்.

இச்சிறுகுழு உறுப்பினர்கள் கூறுகையில், எங்கள் சிறுகுழுவில் தேக்கு, வேங்கை, குமிழ் போன்ற மரக்கன்றுகள் 3500 உள்ளது. நாங்கள் TIST திட்டத்தில் நடைபெறும் கணுக்கூட்டம், பயிற்சி கூட்டத்தில் கலந்துகொண்டு அவர்கள் வழங்கும் பயிற்சியின் படி எங்கள் மரக்கன்றுகளுக்கு இந்த கோடை காலத்தில் போதிய தண்ணீர் இல்லாத காரணத்தால் குறைந்த தண்ணீரால் மரக்கன்றுகளை எவ்வாறு பாதுகாப்பது என்ற பயிற்சியில் எங்கள் மரங்களுக்கு ஒரு லிட்டர் வாட்டர் பாட்டில் மூலம் எங்கள் மரங்களின் வேர்பகுதியில் தண்ணீர் வழங்குகின்றோம்.

மேலும் மரங்களுக்கு அடியில் சூரிய ஒளிபடாதவாறு மூடாக்குபோட்டு மரங்களை பாதுகாத்துக்கொள்கிறோம். TIST திட்டம் எங்களைப்போன்ற விவசாயிகளுக்கு மரங்களின் நன்மை பற்றி நல்ல விழிப்புணர்ச்சி ஏற்படுத்தி வருகிறது. எனவே நாங்கள் TIST- ன் திட்டத்திற்கு நன்றி கூறுகின்றோம்.

